ஜெயங்கொண்டம் நகராட்சி

<table>
<tr><th>DATE OF MEETING OF THE COUNCIL</th><th>MCR NO</th><th>SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA</th><th>DECISION OF THE COUNCIL</th></tr>
<tr><td>17.4.2025</td><td></td><td>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி வியாழன்கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்<br>முன்னிலை :<br>நகர் மன்றத் தலைவர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி</td><td>மன்றம் ஏற்கலாம்</td></tr>
<tr><td>17.4.2025</td><td>448</td><td>பொருள்.1 ஆணையர் அவர்களின் மார்ச் – 2025 மாதாந்திர நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு.</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>17.4.2025</td><td>449</td><td>பொருள்.2 ஜெயங்கொண்டம் நகராட்சி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்கு கடந்த 12.12.2024 அன்றைய ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு துரை அன் கோ என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு ஆணை (ந.க.எண்.3001–1/2024/எச்1 நாள்.31.12.2024) வழங்கப்பட்டு உத்தரவுகளின் படி 01.01.2025 முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒப்பந்த காலம் 28.02.2025 அன்றுடன் முடியும் நிலையில் உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவதுறை சார்பில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி அரியலூர் மாவட்டத்தில் அதிகப்படியான டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்புள்ள காரணத்தினால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை சீரிய முறையில் மேற்கொள்ளவும் பொது மக்களிடையே டெங்கு காய்ச்சல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுருத்தப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 01.05.2025 முதல் 30.06.2025 வரை இரண்டு மாதங்களுக்கு மட்டும் பிரதி ஞாயிறு உட்பட பணிகளை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதங்களின் படி கால நீட்டிப்பு செய்யும் இப்பணிக்காலத்திற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 3001–1/2024/எச்1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>17.4.2025</td><td>450</td><td>பொருள்.3 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2689/2024/பி1 நாள்.21.11.2024–ன் படி இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு MS Office மற்றும் MS Excel Advanced போன்ற கணினி பயிற்சிகள் வழங்குவதற்கு 26.03.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td>M/s. Sri Sai Venkateswara Educatinal & Charitable Trust, Thuraiyur.</td><td>M/s. Vanchi Infotech, Thuraiyur.</td><td>M/s. Senthur Murugan InfoTech, Thammampatti</td></tr>
<tr><td>விலைப்புள்ளி தொகை (GST உட்பட ) ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை (GST உட்பட ) ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை (GST உட்பட ) ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>23,010.00 /-</td><td>25,924.60/-</td><td>26,845.00 /-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Sri Sai Venkateswara Educatinal & Charitable Trust, Thuraiyur என்கிற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s. Sri Sai Venkateswara Educatinal & Charitable Trust, Thuraiyur என்கிற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>ந.க.எண். 0849/ 2025/ இ1</u></td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 17.4.2025 | 451 | பொருள்.4 ஜெயங்கொண்டம் நகராட்சியில், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்கும் பணியாளர் பணிக்கு கடந்த 12.12.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு துரை அன் கோ என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு ஆணை (ந.க.எண்.3001/2024/இ1 நாள் 31.12.2024 ) வழங்கப்பட்டு உத்தரவுகளின் படி 01.01.2025 முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒப்பந்த காலம் 31.03.2025 அன்றுடன் முடியும் நிலையில் உள்ளது. தற்போது,கோடைக்காலம் என்பதாலும் பொதுமக்களுக்கு இந்நகரில் குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்க வேண்டியுள்ளதாலும், எதிர்வரும் 01.04.2025 முதல் 30.06.2025 வரை பிரதி ஞாயிறு உட்பட மூன்று மாத காலத்திற்கு மட்டும் மேற்கண்ட பணிகளை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதங்களின் படி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும் இப்பணிக்காலத்திற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது மக்கள் நலன் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 3001/ 2024 / இ1 | மன்றம் ஏற்கலாம் |
| 17.4.2025 | 452 | பொருள்.5 ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும், அலுவலத்தின் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தும் பணிக்கு ஆகும் செலவின மதிப்பீட்டு தொகை ரூ.13.00இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1211/ 2025 / இ1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 17.4.2025 | 453 | பொருள்.6 ஜெயங்கொண்டம் நகராட்சி வார்டு எண்-03 கீழக்குடியிருப்பு தென்வடல் தெரு அரசு துவக்கப்பள்ளி அருகில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாகவும், நோய் பரவும் அபாயம் உள்ளதாலும், இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ-2.40/- இலட்சம் ஆகும். இந்த தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1212 /2025/இ1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 17.4.2025 | 454 | பொருள்.7 ஜெயங்கொண்டம் நகராட்சிக்குச் சொந்தமான செங்குந்தபுரம் பகுதியில் இயங்கி வரும் நுண் உரமாக்கல் மையத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மும்முனை மின் கேபிள் வெடித்து பழுதாகி உள்ளதால் புதியதாக மும்முனை மின் கேபிள் அமைப்பதற்கும் மற்றும் தற்போது சிதம்பரம் சாலையில் இயங்கி வரும் நுண் உரமாக்கல் மையத்தில் புதியதாக மும்முனை மின் கேபிள் அமைப்பதற்கும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவின மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1213 /2025/இ1 | அனுமதி வழங்கலாம் |
| 17.4.2025 | 455 | பொருள்.8 ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தை 2025-2026 ஆம் ஆண்டு பேருந்து நுழைவு கட்டணம் புதுப்பிக்க (Renewal) விண்ணப்பம் செய்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்(RTO) அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பட்டதில் பேருந்து நிலையத்தை வர்ணம் பூசவும் (Painting) மற்றும் மாற்றுதிறனாளிகள் சிரமம் இல்லாமல் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வதற்கு ஏதுவாக சாய்தளம் (Ramp) அமைத்தும் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் பேருந்து நிலையத்தில் மேற்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவின மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1210 /2025/இ1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| | | | |
|---|---|---|---|
| 17.4.2025 | 456 | பொருள்.9 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி இந்நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் வரிவிதிப்பு செய்யாமல் விடுபட்டுள்ள கட்டிடங்களை கண்டறிய ஏதுவாக ஒவ்வொரு கட்டிடத்திற்கும் தனித்தனியாக (கதவு எண்) பதிவு செய்வதற்கு அனுமதிக்கும். அதற்காகும் உத்தேச செலவினம் 2,50,000/-த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். **0024** / 2024 / அ1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 17.4.2025 | 457 | பொருள்.10 இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள குத்தகை இனங்கள் குத்தகை காலம் 31.03.2025 ல் முடிவடைதாலும் மற்றும் ஏலம் போகாத பேருந்து நிலைய புதியகடைகள் , பழைய கடைகள் மற்றும் கடைவீதி வணிக வாளக கடைகள் (காவல் நிலையம் எதிரில்) ஆகிய இனங்களை 2025-2026 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் மற்றும் ஏல நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 977 / 2025 / அ1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

| வ. எ ண் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரும் இனங்களின் விபரம் | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோர செலுத்தவேண் டிய பொறுப்பு தொகை ரூ. | தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்றிதழ் (01.10.2024 க்கு பிறகு பெறப்பட்ட தாக இருக்க வேண்டும்) | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடி ல் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **I. 3 ஆண்டு குத்தகை இனங்கள்** | | | | |
| 1. | தினசரி மார்க்கெட் வசூல் செய்யும் குத்தகை உரிமம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடங்களில் செய்யப்படும் (நகராட்சிக்கு சொந்தமான கடைகள் தவிர) வியாபாரத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 10,00,000 | 25,00,000 | 15,00,000 |
| **மாட்டிறைச்சி கடைகள் 3 இனங்கள்** | | | | |
| 2. | 1.கீழஅரிஜனதெரு<br>2.சின்னவளையம்<br>3.தொந்தியான் தெரு. (மேல்புறம்) (ஒவ்வொரு இனத்திற்கும் தனித் தனியாக பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்த வேண்டும்) | 20,000 | 50,000 | 20,000 |
| 3. | மீன்கடைகள் வியாபாரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடத்த கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,50,000 | 10,00,000 | 3,00,000 |
| **<u>ஆட்டிறைச்சி கடைகள் 12 இனங்கள்</u>** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | 1.வாரச்சந்தை 2. கொக்கனேரி<br>3. ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் 4. வேலாயுதநகர்<br>5. விருத்தாசலம் ரோடு<br>6. கீழக்குடியிருப்பு 7. மேலக்குடியிருப்பு<br>8. சின்னவளையம் 9. செங்குந்தபுரம்<br>10. சீனிவாச நகர் 11. உய்யக்கொண்டான் ஏரி 12. செந்துறை ரோடு<br>(ஒவ்வொரு இனத்திற்கும் தனித் தனியாக பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்த வேண்டும்) | 30,000 | 1.00,000 | 30,000 |
| **II . 9 ஆண்டு குத்தகை இனங்கள்** | | | | |
| 1. | 1.பேருந்து நிலைய புதிய கட்டிட (Phase I ) தரைதள கடை 9 முதல் 13 வரை.<br>2. பேருந்து நிலைய எதிர்புறம் உள்ள தற்காலிக தரைதள பழைய கடை எண்08 மற்றும் 10.<br><br>3. கடைவீதி வணிக வாளக கடை எண் 01 முதல் 09 வரை .<br>(ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை செலுத்த வேண்டும்) | 50,000 | 1,00,000 | 50,000 |

அலுவலக குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

ந.க.எண். 977 / 2025 / அ1

**ஆணையர்,**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**